






கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், உலக எய்ட்ஸ் தினவிழா நிகழ்ச்சி, ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை தேர்வு கூடத்தில் இன்று (01.12.2016) நடைபெற்றது.

செ.வெ.எண்: 851/2016 நாள்: 01.12.2016

**எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களை ஒருபோதும் தனிமை படுத்த வேண்டாம். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், இன்று (01.12.2016) நடைபெற்ற உலக எய்ட்ஸ் தின நிகழ்ச்சியில் பேச்சு.**

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 1-ம் தேதி உலக எய்ட்ஸ் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. மேலும் எய்ட்ஸ் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், பேரணிகள், கருத்தரங்கம் நடத்தி, விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், இன்று (01.12.2016) ஆசாரிப்பள்ளம், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை தேர்வு கூடத்தில் நடைபெற்ற உலக எய்ட்ஸ் தின நிகழ்ச்சியில், உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, பாட்டுப்போட்டிகளில் வெற்றிபெற்ற ஆறு மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களும், நினைவு பரிசுகளும், தேசிய இளைஞர்கள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கவிதை மற்றும் ஓவியப்போட்டிகளில் வெற்றி பெற்ற ஆறு மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களும், ரொக்கப்பரிசு - முதல்பரிசு ரூ. 1,000/-, இரண்டாம் பரிசு ரூ.500/-, மூன்றாம் பரிசு ரூ.250/- வழங்கி தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு சங்கத்தின் சார்பாக, பொதுமக்களிடையே எய்ட்ஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு, எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மற்ற மனிதர்களை போல் அவர்களுக்கும் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களிடையே எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி, பாட்டுப்போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளை நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலகம் சார்பாக உலக எய்ட்ஸ் தினவிழா நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

நமது மாவட்டத்தை பொறுத்தவரை, ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை 45 மையங்களும், 3 சுகவாழ்வு மையங்களும், 2 அரசு இரத்த சேமிப்பு வங்கிகளும், 7 தனியார் மருத்துவமனைகளும், 2 தொண்டு நிறுவனங்களும், 5 இணைப்பு கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்கள் மற்றும் ஒரு கூட்டு மருத்துவ சிகிச்சை மையம் என 65 இடங்களில் எச்,ஐ.வி/எய்ட்ஸ் குறித்த ஆலோசனை, பரிசோதனை மற்றும் தடுப்பு பணியில் ஈடுபட்டு கொண்டிருக்கிறது.

மேலும் 2007 முதல் செப்டம்பர் 2016 வரை 18 பேருக்கு முதியோர் உதவித்தொகையும், 107 பேருக்கு விதவை உதவித்தொகையும், 5 பேருக்கு ஆதரவற்ற விதவைக்கான உதவித்தொகையும், 4 பேருக்கு புதிய குடும்ப அட்டைகளும், 38 பேருக்கு நலிந்தோர் உதவித்தொகையும், 5 பேருக்கு கணவனால் கைவிடப்பட்டவர்க்கான உதவித்தொகையும், 13 பேருக்கு உடல் ஊனமுற்றோருக்கான உதவித்தொகையும்,

உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ், 791 நபர்களுக்கு உதவித்தொகைகளும் (ஏ.ஆர்.டி), உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ், 19 குழந்தைகளுக்கு குழந்தைகளுக்கான உதவித்தொகையும், 3 பேருக்கு பசுமை வீடுகளும், 207 ஆதரவற்ற குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகையும், 159 நபர்களுக்கு இலவச பேருந்து பயணச்சீட்டுகளையும், அன்னயோஜன திட்டத்தின்கீழ், 84 நபர்களுக்கு (35 கிலோ ரேசன் அரிசி) வழங்கும் திட்டம் என மொத்தம் இதுவரை 1,453 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் நவம்பர் 2005 முதல் அக்டோபர் 2016 வரை 1,192 ஆண்களும், 912 பெண்களும், 7 திருநங்கைகளும், 38 ஆண் குழந்தைகளும், 35 பெண் குழந்தைகள் என மொத்தம் 2,184 நபர்கள் நோயினால் பாதிக்கப்பட்டு, ஏ.ஆர்.டி யில் பதிவு செய்துள்ளார்கள்.

எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களை, அவருடன் உள்ள நண்பர்கள், உறவினர்கள் அவர்களை ஒருபோதும் தனிமை படுத்த வேண்டாம். மேலும் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், அரசு மருத்துவர்கள் வழங்கும் அறிவுரைகள் மற்றும் தொடர் சிகிச்சை பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் எய்ட்ஸ் விழிப்புணர்வு பற்றிய தகவல்களை தெரிந்து கொள்ள (ஐயம்தவிர் என்ற மொபைல் app) வெளியிட்டார்.

முன்னதாக உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு, மருத்துவர்கள், மருத்துவக்கல்லூரி மாணவ, மாணவியர்கள், செவிலியர்கள் என சுமார் 350 பேர்கள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணி, ஆசாரிப்பள்ளம் அரசு மருத்தவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் உள்ள நிர்வாக அலுவலகத்திலிருந்து தொடங்கி, வெளி நோயாளிகள் பிரிவு வழியாக தேர்வு கூடம் வந்து நிறைவடைந்தது.

நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாவட்ட நீதிபதி திரு. ஜாண் ஆர்.டி. சந்தோஷம், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. ரவீந்திரன், துணை முதல்வர் மரு. லியோ டேவிட், இணை இயக்குநர் (ஊரக நலப்பணிகள்) மரு. எ. வசந்தி, துணை இயக்குநர்கள் மரு. எஸ். கிரிஜா (தொழுநோய்), மரு. எம்.மதுசூதனன் (சுகாதாரபணிகள்), அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. ஜெ. கிளாரான்ஸ்டேவி, ஆசாரிப்பள்ளம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு. இராதாகிருஷ்ணன், எய்ட்ஸ் உள்ளோர் நலச்சங்கத்தின் தலைவர் திருமதி. ற்றி. பியூலா, மாவட்ட திட்ட மேலாளர் மரு. என்.டி.ஸ்டெல்லாஜெனட், உறைவிட மருத்துவர் மரு. மேரிவிஜயா, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் முனைவர் ஜெ. ஜீனாஜேம்ஸ், உதவி உறைவிட மருத்துவர் மரு. ஆறுமுகவேலன், கூட்டு மருத்துவ சிகிச்சை மருத்துவர்கள் மரு. சாமிளா, மரு. சுரேஷ் உள்ளிட்ட மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.